## முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| **அணு** | அணு என்பது வேதிவினையில் ஈடுபடும் மிகச்சிறிய துகள். இது எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் போன்ற உபதுகள்களைக் கொண்டுள்ளது.<br>**ஐசோடோப்பு :** ஒரே தனிமத்தின் அணுக்கள் வெவ்வேறு அணு நிறைகளைப் பெற்றுள்ளன. **எ.கா :** $_{17}Cl^{35}$, $_{17}Cl^{37}$<br>**ஐசோபார் :** வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஒரே அணுநிறைகளைப் பெற்றுள்ளன. **எ.கா:** $_{18}Ar^{40}$, $_{20}Ca^{40}$<br>**ஐசோடோன் :** வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஒரே நியூட்ரான்களின் எண்ணிக்கையைப் பெற்றுள்ளன. **எ.கா :** $_{6}C^{13}$, $_{7}N^{14}$ |
| **மூலக்கூறுகள்** | இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட அணுக்கள் அவைகளுக்கிடையேயான ஒரு வலுவான வேதிக்கவர்ச்சி விசையால் ஒன்றிணைந்து உருவாகக் கூடியது, ஒரு மூலக்கூறு ஆகும்.<br>**❋ஒத்த அணு மூலக்கூறு :** இது ஒரே தனிமத்தின் அணுக்களால் உருவாக்கப்படுகிறது. ***எ.கா :*** $O_2$<br>**❋வேற்றணு மூலக்கூறு :** இது வெவ்வேறு தனிமங்களின் அணுக்களால் உருவாக்கப்படுகிறது. ***எ.கா :*** $HCl$<br>**❋பல அணு மூலக்கூறு :** இது மூன்றுக்கு மேற்பட்ட அணுக்களைக் கொண்டுள்ளன. ***எ.கா :*** $CH_4$ |

| **அணுநிறை அலகு** | **சராசரி அணுநிறை** |
|---|---|
| அணுவின் நிறையானது அணு நிறை அலகினால் (amu) அளக்கப்படுகிறது. C–12 அணுவின் நிறையில் 12இல் ஒரு பகுதி ஆகும். | இது இயற்கையில் கிடைக்கக்கூடிய கணக்கிடப்பட்ட ஐசோடோப்புகளின் சராசரி நிறையைக் குறிப்பதாகும். |
| **கிராம் அணுநிறை** | **கிராம் மூலக்கூறு நிறை** |
| ஒரு தனிமத்தின் அணுநிறையை கிராமில் குறிப்பிடுவதாகக் கொண்டால் அதற்கு கிராம் அணுநிறை என்று பெயர். | ஒரு சேர்மத்தின் மூலக்கூறு நிறையை கிராமில் குறிப்பிடுவதாகக் கொண்டால் அதற்கு கிராம் மூலக்கூறு நிறை என்று பெயர். |
| **ஒப்பு அணுநிறை** | **ஒப்பு மூலக்கூறு நிறை** |
| இது தனிமத்தின் ஐசோடோப்புகளின் சராசரி அணு நிறைக்கும் C–12 அணுவின் நிறையில் $1/12$ பங்கின் நிறைக்கும் உள்ள விகிதமாகும். இது திட்ட அணு எடை என்றும் அழைக்கப்படும். | இது ஒரு மூலக்கூறின் நிறைக்கும், C-12 அணுவின் நிறையில் $1/12$ பங்கின் நிறைக்கும் உள்ள விகிதமாகும். |

| | |
|---|---|
| **அவகாட்ரோ விதி** | அவகாட்ரோ கூற்றுப்படி "மாறா வெப்ப மற்றும் அழுத்த நிலையில் சம பருமனுள்ள வாயுக்கள் அனைத்தும் சம அளவு எண்ணிக்கையிலான மூலக்கூறுகளைக் கொண்டிருக்கும்". |

★ மோல்களின் எண்ணிக்கை $= \dfrac{\text{நிறை}}{\text{அணு /மூலக்கூறு நிறை}}$ (அ) $\dfrac{\text{அணுக்கள்/ மூலக்கூறுகளின் எண்ணிக்கை}}{\text{அவகாட்ரோ எண் } (N_A)}$

★ அணுக்கள்/மூலக்கூறுகளின் எண்ணிக்கை = மோல்களின் எண்ணிக்கை $\times N_A$ (அ) $\dfrac{\text{நிறை}}{\text{அணு /மூலக்கூறு நிறை}} \times N_A$

★ சதவீத இயைபு $= \dfrac{\text{சேர்மத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட தனிமத்தின் நிறை}}{\text{சேர்மத்தின் மூலக்கூறு நிறை}} \times 100$

★ STP – திட்ட வெப்பநிலை மற்றும் அழுத்தநிலை என்பது 273.15 K மற்றும் 1 வளிமண்டல அழுத்தம்.

★ ஒப்பு மூலக்கூறு நிறை $= 2 \times$ ஆவி அடர்த்தி

★ அவகாட்ரோ எண் $(N_A) = 6.023 \times 10^{23}$

★ அணுக்கட்டு எண் $= \dfrac{\text{மூலக்கூறு நிறை}}{\text{அணு நிறை}}$

★ மோலார் பருமன் = 22.4 லிட்டர்/22400 மி.லி

### நிறை எண் மற்றும் அணு எண்

$^{12}_{6}C$ — 12: **நிறை எண் (A)**; 6: **அணு எண் (Z)**

*நிறை எண் = புரோட்டான்களின் எண்ணிக்கை + நியூட்ரான்களின் எண்ணிக்கை*

*அணு எண் = புரோட்டான்களின் எண்ணிக்கை*

### முக்கிய தனிமங்களின் அணுநிறைகள்

| | | | |
|---|---|---|---|
| ஹைட்ரஜன் (H) | **1** | கார்பன் (C) | **12** |
| நைட்ரஜன் (N) | **14** | ஆக்சிஜன் (O) | **16** |
| சோடியம் (Na) | **23** | மெக்னீசியம் (Mg) | **24** |
| சல்பர் (S) | **32** | குளோரின் (*Cl*) | **35.5** |
| கால்சியம் (Ca) | **40** | பாஸ்பரஸ் (P) | **31** |
| அலுமினியம் (*Al*) | **27** | ஹீலியம் (He) | **4** |